வங்கக் கடலலையே என் வங்கக் கடலலையே (2)
உன் உறைமேல் சிவப்பு எதனால் வந்தது
வங்கக் கடலலையே வங்கக் கடலலையே (2)

தேயிலைத் தமிழர் ஈழ மண்மீதினில் மடிகின்ற நிலையாலா
தேச மிளந்தவர் பூமியில் பொழியும் செந்நீர் மழையாலா

மொழியை திணித்திடும் மோசத்தை எதிர்த்த இளைஞரின் கொதிப்பாலா
செந்தமிழ் பூமியில் சிங்களர் காடையர் கால்களின் மிதிப்பாலா
கால்களில் மதிப்பாலா

வங்கக் கடலலையே

தமிழ்ஈழம் பூத்திட ஆயுதம் ஏந்திய கரங்களின் துடிப்பாலா
ஏந்திய ஆயுதம் பரிசுத்த இந்திய குண்டுகள் வெடிப்பாலா

உரிமை போரின் உவகை காட்டும் பெண்களின் திறத்தாலா
மூலகம் ஆலையம் யாவும் நொருங்கிய யாழ்மண்ணின் நிறத்தாலா
யாழ் மண்ணின் நிறத்தாலா

வங்கக் கடலலையே

கடலில் பரப்பில் விளைச்சலை தேடி மீனவர் இறப்பாலா
கயவர் சிங்கள கொடுமையால் சிவந்த சூரியன் நெருப்பாலா

கற்பை இழந்து பழியை சுமந்து விழிநீர் பாச்சலா
பள்ளிகள் தோறும் கொள்ளிகள் வைத்த சிங்கள வெறியாலா
சிங்கள வெறியாலா

வங்கக் கடலலையே